HMOP. 156/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 10.03.2026

எ.ம.சா.2– தினேஷ்குமார் த/பெ – தனசேகரன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு நீதிமன்ற அழைப்பாணை அஞ்சல்துறை மூலமாக சார்பு செய்யப்பட்டது. நான் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் வசித்து வருவது சம்மந்தமாக அடையாள ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் மரக்கடை வைத்து தொழில் செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நானும், எதிர்மனுதாரர் விக்னேஷ்வரனும் பள்ளியில் ஒன்றாக படித்தோம். எதிர்மனுதாரர் எனக்கு 2003 ம் வருடத்தில் இருந்து பழக்கம். நாங்கள் ஒன்றாக படித்தோம் என்பதை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை. எதிர்மனுதாரருக்கும், எனக்கும் குடிப்பழக்கம் உள்ளது என்றால் இல்லை.

2) நானும், எதிர்மனுதாரும் சேர்ந்து குடிக்கும் பழக்கம் உள்ளது என்றும், வழக்கிற்காக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். கல்லூரி படிக்கும் போது இருவரும் காதலித்தனர். 29.06.2014 ம் தேதி இருவரும் திருமணம் செய்து கொண்டனர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாருக்கு நிச்சயத்தார்த்தம் நடைபெற்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது, சொல்லி கேள்விப்பட்டேன். நிச்சயத்தார்த்தின் போது மனுதாருக்கு எவ்வளவு நகை போடுவதாக பேசினார்கள் என்று எனக்கு

தெரியாது.

3) திருமணம் திருச்செந்தூரில் வைத்து நடைபெற்றது. நான் திருமணத்திற்கு சென்றேன். திருமணம் கோவிலில் வைத்து நடைபெற்றது, மண்டபம் பிடித்து இருந்தனர். நான் மேற்படி திருமணத்தில் கலந்து கொண்டதற்கான புகைப்படம் மற்றும் வீடியோ எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. திருமணத்தின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தனர். நான் திருமணத்தில் கலந்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கும், எதிர்மனுதாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு நான் அதை சரிசெய்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், என்ன பிரச்சனை என்றால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரரின் தாயாருக்கும் தகராறு ஏற்பட்டது. மேற்படி விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) பலமுறை மனுதாரர் மற்றும் அவரது தாயாரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறுவது குறித்து எந்த தேதி மற்றும் வருடத்தில் அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. தற்போது வரை நான் மனுதாரர் மற்றும் அவரது தாயாரிடம் நான் பேசவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் அவ்வாறு பேசி இருந்தால் அதன் விபரம் மற்றும் தேதிகளை எனது முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து குடித்துவிட்டு, மனுதாரின் நகையை அழித்து விட்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடித்துவிட்டு அடிக்கடி மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தினார்

என்றால் சரியல்ல, எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இல்லை.

5) எதிர்மனுதாரர் தொழில் செய்வது சம்மந்தமாக அடிக்கடி கடன் வாங்கி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது நண்பரான எதிர்மனுதாரரை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றும், அவர் தொழில் செய்வதாக கடன் வாங்கியுள்ளதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே உள்ள பருப்புமில்லில் வேலை பார்த்து வருகிறார். ஆரம்பகாலம் முதல் எதிர்மனுதாரர் என்ன வேலை பார்த்தார் என்றால் முதலில் பருப்பு மில்லிலும் தற்போது பாலிபேக் கம்பெனியில் வேலை பார்க்கிறார். எதிர்மனுதாரரை பற்றிய முழுவிபரம் எனக்கு தெரியாது என்றும், தற்போது சொன்ன விபரங்களை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது வேலை பார்க்கும் நிறுவனத்தில் மனுதாரின் நகையை வைத்து பணம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தால் அதன் விபரத்தை எதிர்மனுதாரர் தனது எதிருரை மற்றும் அவர் தாக்கல் செய்துள்ள HMOP.No.208/2024 மனுவிலும் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் குடும்ப பிரச்சனை மற்றும் வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் எதிர்மனுதாரர் சொன்னதின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.